## பல்வேறு சங்கங்கள், முக்கிய அமைப்புகள், பிரமுகர்கள்

# சேலத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்து ஆதரவு தெரிவித்தனர்!













**சேலம், ஏப். 1–**

**கழகத் தலைவரும் – முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை பல்வேறு சங்கங்கள், முக்கிய அமைப்புகள் மற்றும் பிரமுகர்கள் (30.03.2024) அன்று சேலத்தில் சந்தித்து ஆதரவு தெரிவித்தனர். ஆதரவு தெரிவித்தோர் விவரம் வருமாறு :**

1. தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு சேலம் மாவட்டத் தலைவர் பெரியசாமி, 2. துளுவ வேளாளர் சங்கத் தலைவர் ராஜீ, 3. கிருஷ்ணகிரி மாவட்ட வணிகர் சங்கத் தலைவர் கண்ணன், 4. ஓசூர் சிறு மற்றும் குறு தொழிற்சாலைகள் சங்கத் தலைவர் மூர்த்தி, 5. பேப்பர் கப் சங்க செயலாளர் சண்முக சுந்தரம், 6. கிருஷ்ணகிரி அனைத்து முஸ்லீம் ஜமாத் கூட்டமைப்புத் தலைவர் சய்யத் இர்ஃபான் உல்லா, 7. தெலுங்கு சங்கத் தலைவர் மனோகர், 8. சேலம் வெள்ளி தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் உதய குமார், 9. கட்டுமான உரிமையாளர்கள் சங்கத் தலைவர் மோகன், 10. மண்பாண்ட உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் ராஜா, 11. கள்ளக்குறிச்சி அனைத்து வியாபாரிகள் சங்கத் தலைவர் சுப்பராயலு, 2. மர, ஓடு வியாபாரிகள் சங்கத் தலைவர் சீனிவாசன், 13. சேலம் நெடுஞ்சாலை சங்கம், 14. மாநில லாரி உரிமையாளர் சங்கம், 15. ஜவுளி சங்கம், சேலம், 16. ரோட்டரி கிளப், 17. நுகர்வோர் பொருட்கள் விநியோக சங்கம், 18. நெல் அரிசி மொத்த வியாபாரிகள் சங்கம், 19. சின்ன சேலம் அரிசி ஆலை உற்பத்தியாளர்கள் சங்கம், 20. சேலம் இரும்பு எஃகு சங்கம், 21. பர்கூர் ஜவுளி வியாபாரிகள் சங்கம், 22. சேலம் மாவட்ட பால் உரிமையாளர்கள் சங்கம், 23. சேலம் நகர வர்த்தக சபை, 24. சேலம் மாவட்ட ஹோட்டல் சங்கம், 25. சேலம் ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் சங்கம், 26. கிருஷ்ணகிரி மாவட்ட ”அன்பு செய்வோம் அறக்கட்டளையின் தலைவர் திருமதி செ.கௌரி. இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், அர.சக்கரபாணி, இந்தியா கூட்டணியின் சேலம் தி.மு.க. வேட்பாளரும் மாவட்ட செயலாளருமான டி.எம்.செல்வகணபதி, மாவட்டச் செயலாளர்கள் இரா.இராஜேந்திரன், எஸ்.ஆர்.சிவலிங்கம், பி.பழனியப்பன், தடங்கம் பெ.சுப்ரமணி, ஒய்.பிரகாஷ், தே.மதியழகன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.பார்த்திபன் ஆகியோர் உடனிருந்தனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஆரணி பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட மைலம்சட்டமன்ற தொகுதி இந்தியா கூட்டணி சார்பில் மைலம் ஒன்றியம் தீவனூர் ஊராட்சியில் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு ஆரணி தொகுதி நாடாளுமன்ற வேட்பாளர் தரணி வேந்தனை அறிமுகம் செய்து வைத்து சிறப்புரை ஆற்றினார். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் உள்ளிட்ட தோழமைக் கட்சி மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.




தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில், புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில், "இந்தியா" கூட்டணியில் இடம் பெற்றுள்ள தோழமைக் கட்சி நிர்வாகிகள் முன்னிலையில், திருச்சி நாடாளுமன்றத் தொகுதி ம.தி.மு.க.வேட்பாளர், சகோதரர் துரை வைகோவிற்கு தேர்தல் ஆணையத்தால் ஒதுக்கப்பட்டுள்ள தீப்பெட்டி சின்னத்தை அறிமுகப்படுத்தும் எழுச்சிமிகு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப் பித்தன், ஆ.செந்தில், ம.தி.மு.க. எஸ்.கே.கலியமூர்த்தி, கம்யூனிஸ்ட் கவிவர்மன், கம்யூனிஸ்ட் செங்கோடன், பி.ராஜேஸ்வரி, எம். லியாகத் அலி, சு.சண்முகம். என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், மா.மணிவேல், கவிஞர் ஆ. மரிய எட்வின், கவிவேந்தன், கண்மணி சுப்பு, பழனிவேலு, புதுநகர் குமார், எம்.கே.அறிவுடை நம்பி, சி,மாரியப்பன், ஏ.எல்.கணேசன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தஞ்சாவூர் நாடாளுமன்ற தொகுதியின் கழக வெற்றி வேட்பாளர் ச.முரசொலி பேராவூரணி பகுதியில் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தார். உடன் தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் எம்.பி, என்.அசோக்குமார் எம்.எல்.ஏ, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி உள்ளிட்ட ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.